# அன்னை பூபதி
# தமிழ்க் கலைக்கூடம்

# தமிழ்மொழி
## ஆண்டிறுதிப் பரீட்சை
## ஆனி 2012

## ஆண்டு 4

பெயர் : ____________________

வகுப்பு : ____________________

புள்ளிகள் : ____________________

____________________ ____________________

(ஆசிரியர் ஒப்பம்) (பெற்றோர் ஒப்பம்)

## ① மிகப்பொருத்தமான விடையைக் கோடிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழில் உள்ள முதலெழுத்துகள் ________________.
   (பதினெட்டு, பன்னிரண்டு, முப்பது)

2. நான் விளையாடிக் கொண்டிருந்தேன், ________________ குழலியின் தந்தை வந்தார்.
   (அப்போது, இப்போது, எப்போது)

3. கிளித்தட்டு விளையாட்டில் கிளி ஓடும் கோடு ________________ ஆகும்.
   (குறுக்குக்கோடு, நடுக்கோடு, நீண்டகோடு)

4. கடல் + கன்னி என்பதைச் சேர்த்து எழுதினால் ________________.
   (கடக்கன்னி, கடற்கன்னி, கடகன்னி)

5. மிருதங்கத்தின் பண்டைப் பெயர் ________________.
   (மேளம், தண்ணுமை, முரசு)

6. காட்டு இராசாவாக வாழ்ந்த விலங்கு ________________.
   (சிங்கம், புலி, கரடி)

7. தமிழில் மிகச்சிறந்த ________________________ உள்ளன.
   (இலக்குகள், இதிகாசங்கள், இலக்கியங்கள்)

8. தமிழை ஐயந்தீர ஊன்றிப் ____________________ .
   (படி, படிக்காதே, படிப்பு)

9. எமது மரபு விளையாட்டுகளில் விறுவிறுப்பானது _____________.
   (கிளித்தட்டு, வலைப்பந்தாட்டம், காற்பந்தாட்டம்)

10. கண்ணாடி வெய்யிலில் ___________________ என மின்னியது.
    (சலசல, கடகட, பளபள)

11. ‘போ’ என்னும் எழுத்து ______________________ ஆகும்.
    (உயிரெழுத்து, உயிர்மெய்யெழுத்து, மெய்யெழுத்து)

12. கன்னியாய் வெந்நீர் ஊற்றுகள் _________________ உள்ளன.
    (மன்னாரில், மட்டக்களப்பில், திருகோணமலையில்)

13. மருந்தாகப் பயன்படும் சரக்கு ஒன்று _______________.
(ஏலம், வேர்க்கொம்பு, கறுவா)

14. முயற்சி உடையார் _______________ அடையார்.
(இகழ்ச்சி, உயர்ச்சி, புகழ்ச்சி)

15. மாட்டுப்பொங்கல் என்பதைப் பிரித்து எழுதினால் _________________.
(மாட்டு+பொங்கல், மாட்டுப்+பொங்கல், மாடு+பொங்கல்)

16. பலனை எதிர்பாராது __________________ செய்யவேண்டும் .
(தீயது, நல்லது, கெட்டது)

17. அவன் ஓடினான். அவர்கள் _______________ .
(ஓடுவார்கள், ஓடினார்கள், ஓடுகின்றார்கள்)

18. ஆலம் விதை இரண்டு ________________________ முளைக்கும்.
(வருடத்தில், மாதத்தில், வாரத்தில்)

19. முத்தமிழ் விழாவிற்கு மக்கள் __________________ வந்தனர்.
(திரள்திரளாக, நிரைநிரையாக, மேலும்மேலுமாக)

20. தமிழுக்காக மிகப் பெருந்தொண்டு செய்தவர்களில் ஒருவர் ______________________ ஆவார்.
(திருஞானசம்பந்தர், தாமோதரனார், இராமன்)

21. பறவைகள் _________________பறந்தன.
(வாநத்தில், வானத்தில், வாணத்தில்)

22. நாளாந்தம் நடப்பதை எழுதுவது ____________________ .
(நாட்குறிப்பு, மாதக்குறிப்பு, வருடக்குறிப்பு)

23. நீரில் வாழும் ஒட்டுயிரி __________________________.
(காகம், சுறா, நண்டு)

24. கடல் நீரில் அதிகம் செறிந்துள்ளது _________________.
(சீனி, உப்பு, எண்ணெய்)

25. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினம் ______________.
(மீன், சுறா, ஆமை)

26. திருகோணமலை இலங்கையின் _______________ த் திக்கில் அமைந்துள்ளது.
(வடக்கு, கிழக்கு, தெற்கு)

27. இயல் இசை நாடகம் எனப்படுபவை __________________ ஆகும்.
(முக்கனி, மூன்றுகாலங்கள், முத்தமிழ்)

28. தாயகத்தில் இருக்கும் தாத்தாவுக்கு தமிழினி ____________எழுதினாள்.
(அஞ்சல், நாட்குறிப்பு, புத்தகம்)

29. வேப்பம்பூவினால் செய்யப்படும் உணவுப்பண்டம் _______________.
(பனாட்டு, வடகம், கொழுக்கட்டை)

30. கபிலனும் சேரனும் அங்காடிக்குச் ________________________ .
(சென்றார்கள், சென்றாள், சென்றோம்)

(30 புள்ளிகள்)

## ② பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| **குடுகுடுவென** | **இன்பதுன்பம்** | **ஊண்உறக்கம்** |
| **கலீர்கலீர்** | **கடகட** | **தத்தித்தத்தி** |

எ+கா: தாத்தா **குடுகுடுவென** நடந்து சென்றார்.

1. உழவர் _______________________ இன்றி வயலில் வேலை செய்வர்.
2. கற்பாதையில் மாட்டுவண்டி ________________________ என ஓடியது.
3. குழந்தை ____________________ நடந்தது.
4. மனிதனின் வாழ்வில்_____________________ வருவது வழமை.
5. நடனமங்கையின் சலங்கையொலி அரங்கில் ________________என ஒலித்தது.

(5 புள்ளிகள்)

③ **தரப்பட்ட சொற்களை வாழிட மொழியில் எழுதுக.**

1. விண்ணுந்து ______________________
2. அதிகாலை ______________________
3. கையெழுத்து ______________________
4. நண்பர்கள் ______________________
5. தாய்மொழி ______________________

(5 புள்ளிகள்)

④ **பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி, சொல்லியங்களை (வாக்கியங்களை) நிறைவு செய்க.**

1. தாமரை அழகாக ஓவியம் ______________________ .
2. கிளியின் அலகு சிவப்பாக ______________________.
3. போர்முரசைப் படைமுரசு என்றும் ______________________ .
4. கற்பதைப் பிழையில்லாமல் கற்க______________________ .
5. திருக்குறள் நட்பைப்பற்றிக் ______________________.

(10 புள்ளிகள்)

⑤ **பொருத்தமான சொல்லைத் தெரிந்து, கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **தெய்வம்** | **தமிழர்கள்** | **போற்றுவர்** | **அணைத்து** | **விருந்தளித்து** |

மிகப் பழங்காலத்தில் இருந்தே__________________ பண்பட்ட நாகரிகத்தை

உடையவர்கள். சிறந்த பண்பாடுகளே ஓர் இனத்தின் உயர்வைக் காட்டுவன.

பெற்றோரைத் _______________ எனப் போற்றுதல், ஆசிரியரைப் பணிதல்

ஆகியவை தமிழர் பண்பாடு. வீட்டிற்கு வந்தவரைப் புதியவர் என்றாலும்

அன்புடன் வரவேற்பர். இன்சொல் கூறி ________________ மகிழ்வர். ஒருவரை

ஒருவர் நேரில் காணும்போது கைகூப்பி வணக்கம் கூறுவர். கூடிவாழ்ந்து

உறவாடி இன்புறுவது, நல்வாழ்க்கை எனப் __________________ .

நண்பர்களைக் காணும்போது நலம் கேட்பதும் பிறர் துன்பங்களில் தாமும்

வருந்துவதும் தமிழர் மரபு. பேரன் பேத்தி, பாட்டன் பாட்டி போன்ற

முதியோரை________________ வாழ்தல் தமிழரின் பண்பாகும்.

(10 புள்ளிகள்)

**⑥ பந்தியை வாசித்து, தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.**

நாங்கள் இன்று சீனப்பெருஞ்சுவரைப் பற்றிப் படித்தோம். உலக வியப்புகளில் சீனப்பெருஞ்சுவரும் ஒன்று என்று அறிந்துகொண்டோம். அச்சுவரின் நீளம் இரண்டாயிரத்து நானூற்றைம்பது கிலோமீற்றர். அதை இரண்டாயிரத்து இருநூற்று இருபத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னர் கட்டத் தொடங்கினர். அதைக் கட்டி முடிக்கப் பதினெட்டு ஆண்டு காலம் பிடித்தது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இரவுபகலாகப் பாடுபட்டு அதைக் கட்டினர். மண்ணும், கல்லும் கலந்து முதலில் கட்டி, பின்னர் கருங்கல் கொண்டு அது பலப்படுத்தப்பட்டது. இச்சுவர் மங்கோலியர்கள் எல்லைப் புறத்தை ஊடுருவாமல் சீனர்களால் கட்டப்பட்டது.

1. உலக வியப்புகளில் ஒன்று எது?

_______________________________________________

2. சீனப்பெருஞ்சுவரின் நீளம் என்ன?

_______________________________________________

3. சீனப்பெருஞ்சுவரை எத்தனை ஆண்டுகளுக்கு முன்னர் கட்டத்தொடங்கினர்?

_______________________________________________

_______________________________________________

4. எத்தனை தொழிலாளர்கள் அதைக் கட்டினர்?

_______________________________________________

5. சீனப்பெருஞ்சுவர் எந்த நாட்டவர்களால் கட்டப்பட்டது?

_______________________________________________

_______________________________________________

(15 புள்ளிகள்)

⑦ **பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முத்தமிழ் எனப்படுபவை யாவை?

______________________________

2. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

______________________________

3. கிளித்தட்டு விளையாடுவோர் எத்தனை கன்னையாகப் பிரிந்து நிற்பர்?

______________________________

4. இராவணனின் கொடி எது?

______________________________

5. நீர் அறிந்த பலசரக்குகள் இரண்டின் பெயர்களைத் தருக.

______________________________

(10 புள்ளிகள்)

**⑧ தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை ஒன்று எழுதுக.**



(15 புள்ளிகள்)